பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் - இளை நூலகம்

# உதயன்

விலை ரூபா 6 00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 07 வெள்ளிக்கிழமை (23-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 188

# யுத்தத்தை நிறுத்தக் கோரி சத்தியாக்கிரகப் போராட்டம்

## சமாதானத்தை வற்புறுத்துவதற்கு தமிழ்க் கட்சிகள் புதிய முயற்சி

கொழும்பு, ஓகஸ்ட் 23

**வடக்கு – கிழக்கு யுத்தத்தை நிறுத்தி, மிக விரைவில் சமாதானத்தை ஏற்படுத்துமாறு வற்புறுத்தி சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்துவதற்கு தமிழ்க் கட்சிகள் தயாராகி வருகின்றன.**

**வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பரந்துபட்ட அளவில் சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்துவது தொடர்பாக கொழும்பில் கூடிய தமிழ்க் கட்சிகள் ஆலோசனை நடத்தியதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.**

யுத்தத்தைத் தொடராமல் — உடனடியாக நிறுத்தி — விரைவில் அரசியல் தீர்வை முன்வைக்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்தும் வகையிலேயே இந்த சத்தியாக்கிரகப் போராட்டங்களை மேற்கொள்ளத் தாங்கள் திட்டமிடுவதாக தமிழ்க்கட்சி ஒன்றின் பேச்சாளர் தெரிவித்தார்.

அகிம்சை வழியில் அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதே எமது இலக்காகும் என்றும் அவர் சொன்னார்.

புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, ஈரோஸ் ஆகிய கட்சிகளே இந்த முயற்சி குறித்து அண்மையில் ஆராய்ந்துள்ளன. ஆயினும் இன்னமும் இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனவும் சொல்லப்படுகிறது. (உ-3)

### அலவிஸ் காலமானார்

முன்னைய ஐ.தே.க. அரசுகளில் சபாநாயகராகவும் சிரேஷ்ட அமைச்சராகவும் பணிபுரிந்த ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் தமது 77 ஆவது வயதில் நேற்று காலமானார்.

பத்திரிகையாளராக தமது வாழ்க்கையை ஆரம்பித்த அவர் 1977 ஆம் ஆண்டு முதலில் ஐ.தே.க. வேட்பாளராக கொட்டே தொகுதியில் போட்டியிட்டு வென்றார்.

## மட்டு. பாடசாலையில் குண்டு வெடிப்புச் சம்பவம்

மட்டக்களப்புக்கு அருகே முகத்துவாரம் விவேகானந்தா வித்தியாசாலை வளவுக்குள் — பாடசாலை மதிலுக்கு உட்புறமாக — மரத்துக்குக் கீழ் நேற்று முன்தினம் காலை பாரிய சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது.

இந்த மர நிழலிலேயே பாடசாலை மாணவர்கள் இடைவேளை நேரங்களில் குழுமி நிற்பது வழக்கமாகும்.

எனினும் தற்சமயம் தவணைப் பரீட்சைகள் நடைபெறுவதால், குண்டு வெடிப்பதற்கு சற்று முன்னதாகவே மாணவர்கள் வகுப்புகளுக்குச் சென்றுவிட்டனர். இதனால் தெய்வாதீனமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

குண்டு வெடிப்பு இடம்பெற்றதும் ஆசிரியர்களும் மாணவர்களும் சிதறி ஓடியதில் மாணவி ஒருவர் சுவரில் மோதிக் காயமடைந்தார்.

பாடசாலைக்கு அருகில் இராணுவக் காவலரண் ஒன்று அமைந்துள்ளது

நேரம் கணித்து வெடிக்கும் குண்டே அங்கு வெடித்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## இராணுவத்தை விட்டு ஓடிய 2 அதிகாரிகள் 309 படையினர் நேற்று முன்தினம் கைது!

கொழும்பு, ஓக. 23

சொல்லிக் கொள்ளாமல் இராணுவத்தை விட்டுச் சென்றவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான கால அவகாசம் முடிவடைந்ததை அடுத்து —

இவ்வாறு தாமாக சேவைக்குத் திரும்பாதவர்களைக் கண்டுபிடித்து கைதுசெய்வதற்கான விசேட திட்டம் ஒன்று தற்போது செயற்படுத்தப்படுகின்றது.

இதன்படி —

நேற்று முன்தினம் 309 படையினரும் இரு அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர்.

இதுவரை, மீண்டும் கடமைக்குத் திரும்பிய 4 ஆயிரத்து 200 படையினர் குறுகிய காலப் பயிற்சிக்குப் பின்னர் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

— இவ்வாறு இலங்கை வானொலி அறிவித்தது.

இதுவரை இராணுவத்தை விட்டு ஓடியவர்களின் எண்ணிக்கை பதினைந்தாயிரத்துக்கும் அதிகம் என செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது! (உ- 3)

## உயர்மட்ட இராணுவ விசாரணை

கொழும்பு, ஓக. 23

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தையடுத்து பல்கலைக் கழக உடைமைகள் சேதமாக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து உயர்மட்ட இராணுவ விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை இராணுவ உயர்மட்டக் குழு அங்கு விஜயம்செய்து சேதங்களைப் பார்வையிட்டது.

இந்தச் சம்பவத்தின் போது விலங்கியல் ஆய்வுகூடம் மற்றும் ஜெனரேட்டர், அலுவலக கதவு, ஜன்னல்கள் சேதமாகின. (உ-3)

## ரணில் விக்கிரமசிங்கா கைது செய்யப்படமாட்டார்

### அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஓக. 23

பட்டலந்த சித்திர வதை முகாம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து அவர் கைது செய்யப்படுவார் என வெளியான தகவல்களை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் நேற்று மறுத்துள்ளது.

சில வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் இது பற்றி வெளியான செய்தி முற்றிலும் தவறானது என்று நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் பற்றிக் கேள்விப்பட்டதும் ஜனாதிபதி அது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் சம்பளத்துக்கு கட்டுநிதி வரவில்லை!

குருநகர் ஓக. 23

ஆசிரியர்களுக்கும் கல்விக் கோட்டங்களில் பணி புரியும் அலுவலர்களுக்கும் இம்மாதத்துக்கான சம்பளம் வழங்குவதற்கான கட்டு நிதி இன்னும் வந்து சேரவில்லை என்று அறியப்படுகிறது.

அதனால் மாதாந்தம் 20 ஆம் திகதி வழங்கப்படும் ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்படவில்லை.

இனிமேல் திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சினால் இங்குள்ள வங்கிகளுக்கு கட்டுநிதி பற்றிய அறிவித்தல் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படும் என்றும் —

கல்விப் பகுதியினர் வங்கியுடன் தொடர்பு கொண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பழைய இரு வழக்குகளில் சசிகலாவுக்கு நேற்று பிணை

### புதிய வழக்கில் மீண்டும் கைது

சென்னை, ஓக. 23

ஜெயலலிதாவின் நெருங்கிய தோழி சசிகலா நடராஜனை அவருக்கு எதிரான இரண்டு வழக்குகளில் பிணையில் செல்வதற்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கிய போதிலும்—

மூன்றாவதாக நேற்று தாக்கல் செய்யப்பட்ட புதிய வழக்கு ஒன்றில் அவரைக் கைது செய்து விளக்க மறியலில் வைக்கும்படி சென்னையில் உள்ள பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்கும் நீதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சேடப்பட்டி முத்தையாவின் பல வீடுகள் சீல் வைப்பு!

### சோதனையில் ஆவணங்கள் சிக்கின

சென்னை, ஓக. 23

தமிழக முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா மற்றும் முன்னாள் அமைச்சர் பரமசிவம் ஆகியோருக்குச் சொந்தமான — தமிழகத்தில் உள்ள — பல்வேறு வீடுகளில் நேற்று முன்தினம் ஒரே நேரத்தில் சுமார் பன்னிரண்டு மணி நேரம் மாநிலப் பொலீஸார், கண்காணிப்பு மற்றும் லஞ்ச, ஊழல் ஒழிப்புத்துறை அதிகாரிகள் பெரும் தேடுதல் வேட்டை ஒன்றை நடத்தினர்.

அவர்களின் பல வீடுகள் சீல் வைக்கப்பட்டன.

இச்சோதனையின் போது சேடப்பட்டி முத்தையாவின் திருமங்கலத்தில் உள்ள வீட்டில் இருந்து பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவு 1997 முற்பகுதியில் நாடாளுமன்றில்!

### அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 23

★ அதிகாரப் பகிர்வுக்கு வழி செய்யும் அரசமைப்புத் திருத்தச் சட்டம் அடுத்த வருடம் முதல் காலாண்டுப் பகுதிக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விடும்.

★ அதற்கு முன்பதாக இது தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலே நடவடிக்கைகள் பூர்த்தியாகி விடும்.

—நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், அமைச்சரவைத் தீர்மானங்களை விளக்கிக்கூறும் செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

உத்தேச சட்ட வரைவின் ஷரத்துக்கள், காணி, நீதிபரிபாலனம், சட்டமும் ஒழுங்கும் போன்ற விவகாரங்கள் பற்றி நாடாளுமன்ற தெரிவுக்குழு தற்போது ஆராய்ந்து வருகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

இதுபற்றி அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் தாம் பயனுள்ள வகையில் கலந்துரையாடியதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பேச்சு வார்த்தை நடத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலமே வடக்கு -

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு மாணவர் அனுமதி: புதிய நடைமுறைகள் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 23

முதலாம் ஆண்டு வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான விதிமுறைகளில் அடுத்த ஆண்டு முதல் மாற்றங்கள் செய்யப்படும்.

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

அதிலேயே மாற்றங்கள் குறித்து அறிவிக்ப்பட்டுள்ளது.

★ பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கான விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் முகவரியே பிள்ளையின் நிரந்தர முகவரியாகக் கருதப்படும்.

★ ஜனவரி மாதம் முதலாம் திகதி பாடசாலையில் அனுமதி பெறுவதற்கு முன்னர் குறிப்பிட்ட விலாசத்தில் மூன்று ஆண்டுகள் வசித்ததை விண்ணப்பதாரி கட்டாயமாக நிரூபிக்க வேண்டும்.

★ புள்ளிமுறை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இடத்தில் நீண்ட காலமாக வசித்து வருவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ அனுமதி கோரி விண்ணப்பிக்கும் பிள்ளைகள் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டாலும், சேர்த்துக் கொள்ளப்படாவிட்டாலும் பிள்ளைகளின் பெயர், விவரங்களை பாடசாலை அதிபர்கள் அறிவித்தல் பலகையில் பார்வைக்கு வைக்க வேண்டும்.

★ சகல நிபந்தனைகளும், பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் தமது பிள்ளை அனுமதி பெறாவிட்டால் பெற்றோர் இரு வாரங்களுக்குள் எழுத்து மூலம் பாடசாலை அதிபருக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

★ ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அனுமதிகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

★ பாடசாலை அதிபர்கள் அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர், விவரங்களை பிரதேசக் கல்விப்பணிப்பாளர்களுக்கு தாமதமின்றி அனுப்பி வைக்க வேண்டும்.

★ பயங்கரவாத வன்செயல்களினால் இடம்பெயர்ந்த காரணத்தால் பிறப்புச்சான்றிதழ் அல்லது பாடசாலைச் சான்றிதழைச் சமர்ப்பிக்கமுடியாத பிள்ளைகள் கிராம சேவை அதிகாரியின் சான்றிதழின் உதவியுடன் அனுமதி கோரி விண்ணப்பிக்க முடியும். (இ-3)

## காணவில்லை

கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் வைரவர் கோவிலடியைச் சேர்ந்த

### துரைராசா சிவகுமார்

வயது 21. 17-07-1996 அன்று 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் இடத்துக்கு சொந்த அலுவல் காரணமாக சென்றவேளை காணாமற் போய்விட்டார். இன்று வரை அவர் வீடு திரும்பவில்லை. அவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

க. துரைராசா,
வைரவர் கோவிலடி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

அவர் நினைவால் வாடும்:
அப்பா, அம்மா,
சகோதரிகள்.

(42370)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

## பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1996 செப்ரம்பர் 30ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பளம்:

ரூபா 14,550 - 8x325 — 17,150/-
மாதமொன்றிற்கு

தகைமைகள்:

1. (அ) நிருவாகம் அல்லது முகாமை அல்லது வேறு பொருத்தமான துறையில் கலாநிதிப் பட்டத்துடன் அல்லது ஆராய்ச்சி முதுமாணிப் பட்டத்துடன் பன்னிரண்டு (12) ஆண்டுகளுக்குக் குறையாத நிருவாக அனுபவத்தைக் கொண்டுள்ள பட்டதாரி

அல்லது

(ஆ) தேர்வு மூலம் முதுமாணிப் பட்டம் அல்லது நிருவாகத்தில் அல்லது முகாமையில் டிப்ளோமாவுடன் பதினான்கு (14) ஆண்டுகளுக்குக் குறையாத நிருவாக அனுபவத்தைக் கொண்டுள்ள பட்டதாரி.

அல்லது

(இ) 15 ஆண்டுகளுக்குக் குறையாத நிருவாக அனுபவத்துடனும், அதிற் குறைந்த பட்சம் எட்டு (08) ஆண்டுகள் பல்கலைக்கழகத்திலும் / அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றிலும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ சிரேஷ்ட உதவிச் செயலாளர் / அல்லது பிரதிப் பதிவாளர்/ பிரதிச் செயலாளர் பதவியை வகித்த பட்டதாரி.

அல்லது

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் பதினைந்து (15) ஆண்டுகளுக்குக் குறையாத நிருவாக அனுபவம் உடையவராய் அதில் குறைந்தபட்சம் இரண்டு (02) ஆண்டுகள் சிரேஷ்ட நிருவாகப் பதவியொன்றை வகித்தவராயும், மாதமொன்றிற்கு ரூபா 10,950/-க்குக் குறையாத திரட்டிய சம்பளத்தைப் பெறுபவரான பட்டதாரி.

குறிப்பு:

1. நிருவாக அனுபவம் என்பது இலங்கை நிருவாக சேவையின் பதவியொன்றில் அல்லது அதையொத்த அல்லது அதைவிட உயர்ந்த பதவியொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்தினைப் பெற்றதன் பின்னர் பெற்ற அனுபவம் என்ற கருத்துடையதாகும்.
2. வயது: 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- ஐ யாழ் பல்கலைக்கழக மக்கள் வங்கியின் சிறப்பு அங்காடிக் கிளையிலோ அல்லது சிறாப்பரின் முகப்பு மேசையிலோ செலுத்தி இப்பல்கலைக் கழகத்தின் தாபனக்கிளை உதவிப் பதிவாளர் அலுவலகத்திற் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், இதர விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/ பெறுமதியான காசுக் கட்டளை/தபாற்கட்டளை ஒன்றை 23x10 சதமமீற்றர் அளவுடைய, சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையொன்றுடன் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நியமன அதிகாரிகள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். சேவையிலுள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.

முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவற்ற முறையில் விவரங்கள் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதில் துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1996-08-16

[சி/2791]

## சமய சந்நிதிகளில்

இன்று வெள்ளிக்கிழமை சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோவிலில், வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு விசேட அபிஷேகம், பூசை முதலியன நடைபெறவுள்ளன.

பக்தர்களுக்கான வரலட்சுமி காப்பு வழங்கப்படும்.

(அ-152)

★ ★ ★

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு—

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவை நடத்தும் தெய்வீக கலைநிகழ்ச்சிகள் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை— ''உதித்தனன் உலகம் உய்ய'' என்னும் பொருளில் கலாவினோதன் சு. கணபதிப் பிள்ளையின் வில்லிசை இடம் பெறும். (அ-4)

## அதிபர்கள் கூட்டம்

குருநகர், ஓக. 23

நல்லூர்க் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 11.00 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் யாழ். நல்லூர்க் கல்விக்கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. வ. தானையா தலைமையில் நடைபெறும். (உ-5)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1996-09-20 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சித்த மருத்துவத்தில் — சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/விரிவுரையாளர்.
சித்த மருத்துவத்தில் — தற்காலிகச் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்II/ தற்காலிக விரிவுரையாளர்/தற்காலிகச் செயன்முறை காட்டுநர்.

சம்பள அளவுத்திட்டம்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II:
ரூபா 10, 650-5x325- 12, 275/-
மாதமொன்றிற்கு.

தற்காலிகச் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II :
ரூபா 10, 650/-
(நிலையானது)
மாதமொன்றிற்கு

விரிவுரையாளர்
ரூபா 6,050 - 10x250 — 8, 550/-
மாதமொன்றிற்கு.

தற்காலிக விரிவுரையாளர்:
ரூபா 6, 050—
(நிலையானது)
மாதமொன்றுக்கு,

தற்காலிகச் செயன்முறை காட்டுநர்:
ரூபா 4, 420/-
(நிலையானது)
மாதமொன்றிற்கு.

குறிப்பு:

(அ) 1993 மே 12ஆம் திகதி 9/93 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

(ஆ) எல்லாப் பட்டதாரிகளுக்கும் ஆண்டிற்கு ரூபா 10, 000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தின் 10%மும், 'புத்தகப்படியாக' ஒவ்வொரு காலாண்டு ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப்பணமாக வழங்கப்படும்.

(இ) அத்துடன் மேற்குறித்த சம்பளத்தின் 25% இற்குச் சமமான தொகை நிலுவையிலுள்ள பணி நிறைவேற்றுப் படியாக 1996 டிசம்பர் 31ஆம் திகதி வரை வழங்கப்படும்

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளை உதவிப் பதிவாளர் அலுவலகத்திற் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய, சுயமுகவரியிட்ட ரூபா 2/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1996-08-15 (C-2792)

## 6ம்- ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 07 — 02 — 1947



விண்ணில்: 29 — 08 — 1990

### திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு

திதி: 23- 8- 96

சிந்து பாடிய பூங்குயிலானவள்
சிறகடித்துப் பறந்து போய் இன்று
ஆறு ஆண்டுகள் ஆன போதிலும்
அவனிமீதிலே உன் நினைவு ஆடுது
வெந்துயரிலே வாழும் கணவனும்
வேரிழந்த பிள்ளைகள் யாவரும் — உனை
சிந்தை மீதிலே என்றும் போற்றுவோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதர சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள்

இல 29, (89) காரைக்காட்டுலேன்,
வண் — வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

(42360)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible]

# தைவானுடன் பேசுவதற்கு சீனா விருப்பம் தெரிவிப்பு

## 45 வருட பிரச்சினையைத் தீர்க்க முயற்சி

பீஜிங், ஒக. 23

தைவானுடன் பேச்சு நடத்துவதற்கு சீனா மீண்டும் விருப்பம் தெரிவித்துள்ளது.

தைவானுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இதுவே சரியான தருணம் என்றும் —

தைவான் இந்த யதார்த்த நிலையை உணர வேண்டும்என்றும் — சீனாவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக சீன செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

1949 ஆம் ஆண்டு வரை சீனாவின் ஒரு பகுதியாகவே தைவான் (முன்னர் போர்மோசா) இருந்து வந்தது.

1949 இல் சீனாவில் கம்யூனிஸ்ட்டுகள் தலைமையிலான ஆட்சிஏற்படுத்தப்பட்டசமயம் அதுவரை சீனாவில் ஜனாதிபதியாக இருந்த சியாங்கேஷேக் தைவானுக்கு தப்பி வந்து, அமெரிக்க உதவியுடன் தைவானில் ஆட்சியை அமைத்தார்.

அன்றில் இருந்து சீனா தைவானை உரிமை கோரி வருகிறது. (இ)

# ஜோர்தான் பிரதமரை பதவி விலகக் கோரிக்கை

## எதிர்க்கட்சி போராட்டம்

அம்மான், ஒக. 23

ஜோர்தானில் உணவுப் பொருள்களின் விலையேற்றத்தால் உருவாகியுள்ள பதற்ற நிலை தொடர்பாக பிரதமர் அப்துல் கலிம் கபராட்டி பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டுமென அந்த நாட்டின் எதிர்க்கட்சி மீண்டும் குரலெழுப்பி வருகிறது.

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் இடம்பெற்ற வன்முறைகள் பற்றிய விவரங்களை அம்மான் நகரில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் எதிர்க்கட்சி எடுத்து விவரித்தது.

கலவரங்கள் இடம்பெறும் கரத் நகரில் காலவரையற்ற ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கலவரங்கள் மேலும் இடம்பெறின் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மன்னர் ஹுசேய்ன் தெரிவித்துள்ளார்.

ஆயுதப் படையினர் நகர்ப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், உயர்ந்த கட்டடங்களின் கூரைகளில் குறிபார்த்துச் சுடவல்ல படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பின்பேரில் பாணின் விலையை அரசு இரண்டு மடங்காக்கியதைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளில் கலவரங்கள் வெடிக்க ஆரம்பித்தன. (இ-10)

### வைரம், முத்து பதித்த

# மகாராணியாரின் கைப்பட்டி திருட்டு!

லண்டன், ஒக. 23

18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததும், மிகப் பெறுமதி வாய்ந்ததும், அரச குடும்பத்துக்கு உரியதுமான வைரமும், முத்தும் பதித்த எலிஸபெத் மகாராணியாரின் கைப்பட்டியொன்று காணாமற் போய் விட்டது.

ஏறக்குறைய 62 ஆயிரம் டொலர்கள் பெறுமதியான இந்தக் கைப்பட்டி மகாராணியாரின் அந்தரங்க அறையொன்றில் லொக்கரில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வந்ததாகவும் –

மகாராணியார் தனது கோடை விடுமுறைக்கான சுற்றுப் பயணத்துக்கு புறப்பட இருந்த சமயம் அதனைத் தேடிய போது அது காணமல் போயிருந்தது தெரியவந்ததாகவும்— பக்கிங்காம் அரசமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் திருட்டுத் தொடர்பாக மகாராணியாரின் பிரத்தியேக ஊழியர் ஒருவர் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அரச குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். (இ-3)

## பிலிப்பீன்ஸ் கிளர்ச்சிக்கு தீர்வு முயற்சி

பிலிப்பீன்ஸில் இடம்பெற்று வரும் கிளர்ச்சிகளை நிறுத்தும் நோக்கத்துடன் பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பிடல் ரமோசும், போராளிகளின் தலைவர் நூர் மிஸ் ஆயிலும் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக தலைநகர் மணிலாவிற்கு 16 மைல் தெற்கேயுள்ள மலிபான் என்ற சிறிய நகரில் சந்தித்தனர்.

பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் இப்படியான சந்திப்பு இடம்பெற்றது. (இ-10)

## நேபாளத்தில்

நேபாளத்தின் எதிர்க்கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியால் ஒழுங்கு செய்யப்பட்ட பொது வேலை நிறுத்தம் காரணமாக நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவில் அரச பணிகள் யாவும் முற்றிலும் முடக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

**உலக அரங்கில்**

### முன்னாள் அமைச்சர்

# சுக்ராமைக் கைதுசெய்ய இன்ரர்போலின் உதவி

## இந்தியா நாடி உள்ளது

புதுடில்லி, ஒக. 23

இந்தியாவின் முன்னாள் அமைச்சர் சுக்ராமைக் கைது செய்ய இன்ரர்போலின் (சர்வதேசபொலிஸ்)உதவியை இந்தியா நாடியுள்ளது.

சுக்ராமின் வீட்டைச் சோதனையிட்டு, 3 கோடி ரூபா பணம் மற்றும் ஆபரணங்களைக் கைப்பற்றியதையடுத்து அவரை இந்தியாவில் தேடும் பணியில் சி. பி. ஐ. தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

மருத்துவ சிகிச்சைக்காக சென்று வெளிநாட்டில் அவர் தலைமறைவாகியிருக்கலாம் என்றும் கருதப் படுகிறது. இதனாலேயே சி.பி.ஐஇன்ரர்போலின் உதவியை நாடியுள்ளது.

இதே வேளை — சுக்ராம் மற்றும் அவரது உறவினர்களின் 19 வங்கிக் கணக்குகளை சி. பி. ஐ "சீல்" செய்துள்ளது.

காங்கிரஸ் கட்சியில் இருந்து இவரை நீக்கிவிட்டதாக காங்கிரஸ் தலைவர் பி. வி. நரசிம்மராவ் நேற்று அறிவித்துள்ளார். (இ-3)

# வைத்திய மாணவர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக. 23

ஆயிரத்துக்கும் மேற்பட்ட வைத்திய மாணவர்கள் அண்மையில் கொழும்பு லிப்டன்ஸ் சதுக்கத்தில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கொழும்பு, பேராதனை, றுகுணு,ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, களனி பல்கலைக்கழகங்களில் பயிலும் வைத்திய மாணவர்களே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

பல்கலைக்கழகங்களில் பயின்று வெளியேறும் சகல டாக்டர்களையும் அரச ஆஸ்பத்திரிச் சேவையில் அமர்த்த முடியாது என்று—

சுகாதார அமைச்சர் ஏ.எச். எம். பௌசி கருத்து வெளியிட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வெளிநாடுகளில் பயின்ற வைத்திய பட்டதாரிகள் 600 பேரை அரச ஆஸ்பத்திரிகளில் பணிக்கு அமர்த்தியமை, அரச ஆஸ்பத்திரிகளில் பணி புரியும் 600 உதவி வைத்தியர்களை (A. M. P) சேவையில் சேர்த்துக் கொண்டது ஆகியவற்றுக்குக் கண்டனமும் ஆட்சேபமும் தெரிவிக்கும் வகையிலும் வைத்திய மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை மூன்று வருட வேலை ஒப்பந்தத்தில் 400 வைத்தியர்கள் மலேசியாவில் பணிபுரியத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களது வேலை ஒப்பந்தம் மேலும் ஒரு தவணைக்கு (3 வருடங்களுக்கு) நீடிக்கப்படும்.

அடுத்த வருடத்திலும் வைத்தியர்கள் மலேசியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன (அ)

# வெங்காயச் செய்கை மழையால் பாதிப்பு

தற்போது பெய்து வரும் மழை காரணமாக வெங்காயத் தோட்டச் செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு பிரதேசங்களில் அநேகவயல் நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

இன்னும் 10 அல்லது 15 தினங்களில் அறுவடைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் வெங்காயத் தோட்டங்களில் நீர் புகுந்துள்ளதால் வெங்காயம் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது.

சங்குவேலியில் உள்ள கேலங்காமம் குளத்தை சுற்றியுள்ள பகுதிகள், மானிப்பாய், கந்தரோடை போன்ற இடங்களில் வெங்கா[illegible] பாத்திகளிடையே தேங்கி உள்ள வெள்ளத்தை தோட்டச் செய்கையாளர்கள் இயந்திரம் மூலம் வெளியேற்றிவருவதை அவதானிக்க முடிகிறது.

மழை தொடர்ந்து பெய்யுமேயானால் முழு வெங்காயப் பயிர்களும் நாசமாவதுடன் ஏனைய பயிர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். (இ-152)

# உணவு மற்றும் மருந்து பொருள்களை உடனே வன்னிக்கு அனுப்பி வைக்குக

## சந்திரிகாவுக்கு தங்கத்துரை கடிதம்

கொழும்பு, ஒக. 23

வன்னிப் பிரதேசத்திலே சொல்லொணாத் துயரத்துடன் வாழும் மக்களுக்கு உடனடியாக உணவு, மற்றும் மருந்துவகைகளை அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு திருமலை மாவட்ட எம்.பி திரு அ. தங்கத்துரை ஜனாதிபதியிடம் அவசரகோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வன்னிப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் படுகின்ற துன்பங்களும் துயரங்களும் எமக்குக் கவலையையும் வேதனைகளையும் தருவனவாக உள்ளன.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகசில இலட்சம் மக்கள் வன்னிப்பிரதேசத்தில் உள்ளனர். இவர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள்.

சுமார் இரண்டு இலட்சம் மக்கள் சமீபத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் காரணமாக கிளிநொச்சிப் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

அவர்கள் அண்மையில் உள்ள காடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்களுக்கு இருப்பிடங்களில்லை, உணவில்லை,மருந்து இல்லை, மருத்துவத்துக்கான வசதிகளும் இல்லை, உண்மையில் அவர்களுக்குகுடிக்கத்தண்ணீர் கூட இல்லை.

இவ்வருடம் ஜூலை மாதம் 18 ஆம் திகதிக்குப் பின்னர் ஓகஸ்ட் 12 ஆம் திகதியே உணவு லொறிகள் அங்கு சென்றன. இம்மாதம் 17 ஆம் திகதி வரையில் 90 உணவு லொறிகளே அங்கு சென்றுள்ளன.

இம்மக்களுக்கு தினசரி 40 லொறிகளில் உணவுப் பொருள்கள் தேவையாக உள்ளன.

உணவுப் பொருள்களைத் தவிர கிடுகுகள், சமையற் பாத்திரங்கள், பாய்கள், உடைகள் என்பனவும் அவர்களுக்கு அவசரமாகத்தேவைப்படுகின்றன. இவை தினசரி 10 லொறிகளில் தேவைப்படுகின்றன.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# காலபோக நெற்செய்கை; விவசாயிகள் ஆயத்தம்

## ஆனால் விதைநெல் இல்லை

வலிகாமம் தெற்கு, ஒக. 23

காலபோக நெற்செய்கைக்கான ஆயத்த வேலைகளில் விவசாயிகள் தற்போது கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர்.

காலபோக நெல்விதைப்புக்கான பருவ மழை பெய்துள்ளதால் வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்குப் பிரதேசங்களில் வயல் வேலைகள் தீவிரமடைந்துள்ளன.

தமது வயல்களை உழுது பண்படுத்திவரும் விவசாயிகள் விதை நெல் இல்லாமையால் பெரிதும் கவலை,கொண்டுள்ளனர்.

வலிகாமத்தை விட்டு மக்கள் இடம் பெயர்ந்ததோடு பல விவசாயிகள் தம்மிடமிருந்த விதைநெல்லையும் இழந்து விட்டனர்.

விவசாய திணைக்களத்தினால் கமநல சேவை நிலையங்கள் ஊடாக தெற்கில் இருந்து விதைநெல்லைத் தருவித்து உரிய காலத்தில் வழங்கப்படுமா என சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

அதே சமயம் விதை நெல் பெற்றுக்கொள்ள தென்மராட்சி – வடமராட்சிப் பகுதிகளுக்கும் விவசாயிகள் சென்றுள்ளனர். (இ-152)

## இடர் நிவாரண கடன்

அரச ஊழியர்களுக்கு அரசினால் வழங்கப்படும் 10 மாதச் சம்பளக் கடன் (இடர் நிவாரணக் கடன்) யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த வருட முற்பகுதியில் சிலருக்கு வழங்கப்பட்டதுடன் இக்கடன், பண நெருக்கடி காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது மீண்டும் இக்கடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டன

தில்லையம்பலம் வேலுப்பிள்ளை ஆகிய எனது 18200 1902 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், ஓய்வூதிய அட்டையும் யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரிக்கு அறியத் தரவும். 231, கோவில் வீதி, நல்லூர்.

(42353)

கொக்குவில், பொற்பதி வீதியைச் சேர்ந்த டுஷ்யந்தி பரமநாதனின் 755010871 V இலக்க தேசிய அடையாள அட்டை, வேம்படி பாடசாலை அடையாள அட்டை மற்றும் கல்விசார் அட்டைகள் 21-8-96 இல் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்திற்கு அறியத் தரவும். இல: 121, ஸ்ரேசன் வீதி, கொக்குவில். சன்மானம் வழங்கப்படும்.

(42358)

## திருமணசேவை

மல்லாகத்தில் இயங்கிய துர்க்கா திருமண சேவை தற்பொழுது மாயக்க பிள்ளையார் கோவிலடி, தம்பசிட்டி, புலோலி மேற்கு. புலோலி எனும் முகவரியில் இயங்குகிறது. நாவலர் றோட், பிறவுண்றோட் சந்தியில் புதனும், திங்களும் சந்திக்கலாம்.

(42351)

## ஆங்கிலம் / கணிதம்

Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 10, 9 உட்பட) கற்பிக்கப்படும். 10 வருட Paper Classes தினமும் பகல் 8-12, பிற்பகல் 3-6 வரை, London Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (42342)

## நீமியா

நெற் பயிருக்கு அடிப்பசளையும், அதிக விளைச்சலுக்கும் பயிர்ப் பாதுகாப்பிற்கும் நீமியா இயற்கைப் பசளை பாவியுங்கள். அண்ணா கோப்பி கடைகளில் கிடைக்கும். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி-2789)

சனி ஆரம்பமாகும்

# கிரிக்கட் போட்டியை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

கொழும்பில் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகும் சிங்கர் வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கட் போட்டிகளுக்காக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கிரிக்கட் மைதானங்களில் பொலீஸார் பாதுகாப்பைக் கடுமையாக்கியுள்ளனர்.

போட்டிகளில் பங்கு பற்றும் குழுக்களுக்கு பாதுகாப்பு அளிக்க அதிவிசேட கமாண்டோக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படைப் பிரிவைச் சேர்ந்த கமாண்டோக்கள் விளையாட்டு வீரர்களுக்கு பாதுகாப்பு வழங்குவர்.

ஏனைய பொலீஸ் பிரிவுகள், வெளிநாட்டு தலைவர்களின் விஜயத்தின் போது வழமையாக வழங்கப்படும் பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலீஸ்மா அதிபரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியா, இந்தியா, ஸிம்பாப்வே ஆகிய நாடுகளின் விளையாட்டு வீரர்களை வரவேற்பதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கிரிக்கட் போட்டிகள் நடைபெறும் எல்லா இடங்களுக்கும் அரசாங்கம் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கிரிக்கட் மைதானத்துக்குச் செல்லும் எல்லாப் பார்வையாளர்களும் கமாண்டோக்களின் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

மூன்று வாரங்கள் நடைபெறவிருக்கும் இந்த சுற்றுப் போட்டியின் போது விளையாட்டு மைதானங்கள் உள்ள பகுதிகளில் வாகனங்கள் நிறுத்துவது அனுமதிக்கப்படமாட்டாது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-3)

# நியூட்டன் கல்வி நிலையம்

82, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

## கணக்கியல் வகுப்புகள்

## A/L 97

கம்பனிக் கணக்குகள்

ஆரம்பம்: **24 – 08 – 96** 2-15 மணி
(சனிக்கிழமை)

குறிப்பு:

★ புதிய மாணவர் கற்காத பாடங்கள் முழுமையாக கற்பிக்கப்படுவதுடன், சகல பாடங்களும் மீட்டல் செய்யப்படும்.

★ குறைந்தது 20 வருட கடந்தகால வினாவிடைகள் கற்பிக்கப்படுவதுடன், புதிய பாடத்திட்டத்திற்கமைவான மாதிரி வினா விடைகள் ஆராயப்படும்.

ஆசிரியர்: திரு. S. D. J. சுதர்ஷன்
(ஆசிரியர் யாழ் நகரில் தற்போது எமது நிறுவனத்தில் மட்டும் கற்பித்து வருவது குறிப்பிடத்தக்கது)

ஏனைய கலை, வர்த்தக வகுப்புகளும், விளையாட்டு உத்தியோகத்தருக்கான போட்டிப் பரீட்சை ஆயத்த வகுப்பும், அடிப்படை சிங்கள வகுப்புகளும் நடைபெறுகின்றன.

(மேலதிக விவரங்கள் அலுவலகத்தில்)

(42349) — நிர்வாகி

# ★ விவாஹ சுப முகூர்த்த அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருடம், ஆவணி மாதம் 8ஆம் நாள் (**24–08–96**) சனிக்கிழமை மூலநட்சத்திரமும், சித்த யோகமும் இணைந்த சுபமுகூர்த்தத்தில் முற்பகல் **10-43** மணிமுதல் **11.34** மணி வரையுமான துலாலக்கின சுபமுகூர்த்த வேளையில்

திரு. திருமதி யோகீஸ்வரக்குருக்கள்
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்
சிரஞ்சீவி
**நாகேஸ்வரசர்மா**
அவர்களுக்கு

திரு. திருமதி தங்கசாமிஐயர்
அவர்களின் ஏக புத்திரி
சௌபாக்கியவதி
**சற்குணதேவி**
அவர்களை

கன்னிகாதானஞ் செய்து, திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணாதி விவாஹ சோபனங்கள் ஊரெழு மணமகள் இல்லத்தில் நிகழ்த்தப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால், தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

சமாவர்த்தனம்: 24–08–96 சனிக்கிழமை காலை 5.30 மணியளவில் மணமகனில்லத்தில் நடைபெறும்.

''இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்''

திரு. திருமதி ஜெகநாதசர்மா
திரு. திருமதி சௌந்தரராஜசர்மா
திரு. திருமதி பஞ்சாட்சரகுருக்கள்
திரு. திருமதி சிதம்பரநாதக்குருக்கள்
இந்திரன் அம்மன் கோவிலடி,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

திருமதி சாரதாம்பா-தங்கசாமிஐயரும்,
பிள்ளைகளும்.
சிவபூரணி அம்மன் கோவிலடி,
ஊரெழு மேற்கு, ஊரெழு,
சுன்னாகம்.

மணமகனில்லத்தில் (**26-08-1996**) திங்கட்கிழமை வரவேற்பு வைபவம் நடைபெறும்,

'இரு வீட்டார் அழைப்பு'

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு மன்னிக்கவும்.

(42362)

# சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தலுக்காக சகல கிளைகளின் வாக்காளர் பட்டியல்களும், 30 - 09 - 96 ஆம் திகதியுடன் மூடப்படும். ரூ 100/- க்கு குறையாத அங்கத்துவப் பணத்தைக் கொண்டுள்ளவர்களின் பெயர்களே வாக்காளர் பட்டியலில் இடம்பெறும். எனவே ரூ. 100/- க்கு குறைவான அங்கத்துவப் பணத்தைக் கொண்டுள்ளவர்கள் மிகுதிப் பணத்தை தமது கிளைகளில் செலுத்தி வாக்காளராகும் தகுதியைப் பெற்றுக்கொள்ளுமாறு அறியத் தருகின்றேன். மூடப்பட்டிருக்கும் கிளை அங்கத்தவர்கள் மேலதிக விவரங்களுக்கு தலைமை நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்,
20 - 08 - 96.

(சி-2788)

# உ
# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் தாது வருஷம், ஆடி மாதம் 30 ஆம் நாள் (**14-08-1996**) புதன்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை

**பிரம்மஸ்ரீ கு. மகேஸ்வரக் குருக்கள்** அவர்களின்
(சின்னப்பா ஐயர்)

அந்திமக் கிரியைகளில் பங்குபற்றி அவருடைய ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

ஆவணி 7 (23-08-96) வெள்ளிக்கிழமை பகல் 10 மணி தசாகம்
ஆவணி 8 (24-08-96) சனிக்கிழமை பகல் ஏகோதிஷ்டம், மாசிகம்
ஆவணி 9 (25-08-96) ஞாயிற்றுக்கிழமை பகல் சபிண்டிகரணம்
ஆவணி 10 (26-08-96) திங்கட்கிழமை மதியம் 11 மணி கிருஹயக்ஞம்

கரைப்பிரான் பிள்ளையார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

இங்ஙனம்:
பிள்ளைகள்.

(42357)

# 90-ம் நாள் நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பில்: **25–01–1964**

அமலன் அடியில்: **26–05–1996**

## சிவகுரு இராசகுமாரி

செய்நன்றி மறந்த சில சின்ன இதயங்களால்
சிதைந்துபோன இராசகுமாரிக்கு
எம் இதயத்திலிருந்து வரும் கண்ணீர் அஞ்சலிகள்.
அண்ணனின் ஆயிரங்காலத்துப் பயிருக்கு இடையே
களைதான் நானோ?...... என்று
தன்னைத்தானே கருக்கிக்கொண்ட தங்கையே ...
தாயாய் உன்னைத் தாங்க என்று
உறவு தேடிய அன்புச் சகோதரி ......
தாயினும் நல்ல தலைவனின் திருவடிகளில்
சாந்திபெற வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
— சகோதரர்கள்

மீசாலை தெற்கு,
மீசாலை.

(42359)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா எல்லைப்புறக் கிராமங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

## புலிகள் தாக்கலாம் என அச்சம்

கொழும்பு, ஒக. 23

ஊவா மாகாணத்தின் எல்லைப் புறக் கிராமங்கள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என அஞ்சப்படுவதை அடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஊவாப் பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரமரட்ன இத்தகவலை ஊர்ஜிதப்படுத்தியிருக்கின்றார்.

சியாம்பலாண்டுவ மற்றும் கொட்டிகலப் பகுதிகளில் பல கிராம வாசிகளின் மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் நடமாட்டம் எல்லைப் புறக் கிராமங்களில் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

புத்தல, சியாம்பலாண்டுவ, மொனறாகல பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாக பிரதிப் பொலீஸ்மா அதிபர் விக்கிரமரட்ன கூறினார்.

மேலதிகமாக இருநூறு பொலீஸாரைக் கொண்ட பொலீஸ் அணி இப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு ஊர்காவலரும், சிவில் பாதுகாப்புப் படையினரும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் உதவி வருகின்றனர்.

கிராமவாசிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருப்பதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் மேலும் சொன்னார்.

அவர்கள் குழுக்களாகச் சேர்ந்து பொலீஸாருக்கு உதவி வருகின்றனர்.

கிராமங்களுக்கு விடுதலைப் புலிகள் நுழைவதைத் தடுப்பதற்காக இப்பகுதியில் உள்ள தடை முகாம்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

''அனேகமாக விடுதலைப் புலிகள் எல்லைப்புறக் கிராமங்களைத் தாக்குவதற்குத் திட்டமிடக்கூடும். நாம் அதற்கு வாய்ப்பளித்து விட முடியாது.''— இவ்வாறு பிரதிப் பொலீஸ்மா அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

(உ)

## எழுதுநர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

கொழும்பு, ஒக. 23

அரசாங்க எழுதுநர் சேவையிலும், அது சார்ந்த சேவைகளிலும் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

1994, 1995 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே நியமனங்கள் இடம் பெறும்.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 25 ஆம் 28ஆம் திகதிகளில் பொது நிர்வாக அமைச்சில் நடைபெறும்.

இரண்டாயிரமாம் ஆண்டு வரை எழுதுநர் மற்றும் அது சார்ந்த சேவைகளுக்கு மூன்று கட்டங்களில் ஆள்களைச் சேர்த்துக் கொள்ளும்படி அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

முதலாம், இரண்டாம் கட்டங்களின் கீழ் சுகாதாரம், தபால்துறை, ரயில்வே, நீதிச் சேவை, சிறாப்பர் சேவை ஆகியவற்றுக்கு ஆயிரத்து 500 பேர் தெரிவு செய்யப்படுவார்கள்.

அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைகளில் 552 பேர் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

## சீருடை அணிய அறிவுறுத்து

யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்கள் கடமை நேரத்தில் கட்டாயமாகச் சீருடை தரிக்க வேண்டும் என்றும் —,

கடமைக்கான அடையாள அட்டையை அணிந்திருக்க வேண்டும் என்றும் -

வைத்தியசாலைப் பணிப்பாளரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சீருடையோ, அடையாள அட்டையோ இன்றி ஊழியர் காணப்படும் பட்சத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-15)

## இயலாத காரியமல்ல

யாழ்ப்பாணத்தின் கல்விக் கலாசாரம் வீழ்ச்சி அடையாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்று —

யாழ். பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

அந்தக் கல்விக் கலாசாரத்தைப் பேணிக் காத்து வளர்க்கும் பொறுப்பு, கல்வி சார் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகிய நான்கு தரப்பினருக்கும் உண்டு என்றும், அவர்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

தமிழ் மக்களின், குறிப்பாக யாழ்ப்பாணத்து மக்களின் முக்கிய சொத்து கல்வியே எதனை இழந்தாலும் கல்விச் சொத்தை இழப்பதற்கு அவர்கள் தயாரில்லை.

இத்தனை கஷ்டங்கள் அவலங்களின் மத்தியிலும் கல்விச் சொத்தை இழந்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் மிகவும் அக்கறையாக உள்ளார்கள். கல்வியே கருந்தனம் என்பதனை மனப்பூர்வமாக உணர்ந்தவர்கள் அவர்கள். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று அனுபவ ரீதியாக அறிந்தவர்கள்.

எனினும் கடந்த சுமார் இரண்டு தசாப்தங்களாக, தமிழர்களின் கல்விச்சொத்தை கல்விக் கலாசாரத்தைச் சீரழித்துவிட வேண்டும் என்ற சதி தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

மூலவளங்களுக்கு முழுக்க முழுக்க வெளியாரையே நம்பி இருக்கும் நிலை உருவாகியதால் — உருவாக்கப் பட்டதால் — யாழ்ப்பாணக் கல்விக் கலாசாரம் வீழ்ச்சி கண்டு வருவது கண்கூடு.

அதற்கு மேலதிகமாக கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக நிலவும் போர்ச் சூழ்நிலை இந்த மண்ணின் கல்வி நிலையைக் கணிசமான அளவுக்குப் பாதித்திருக்கிறது.

பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை சுட்டிக்காட்டி இருப்பது போல, முன்னர் கல்வியில் முன்னணியில் இருந்த பல குடாநாட்டுப் பாடசாலைகள் இப்போது பின்தங்கிய நிலையை அடைந்துள்ளன. இது தொடருமானால், பரவுமானால் யாழ்ப்பாணக்கல்விக் கலாசாரம் அழிந்து போகும் ஆபத்து உண்டு.

கல்விப் பெரியோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கொடைவள்ளல்கள் சேர்ந்து ஒன்றுபட்டுக் கூட்டாக உழைத்ததால்தான் குடா நாட்டில் கிராமத்துக்குக் கிராமம் கல்விச்சாலைகள் தோன்றின. அத்தகைய பாடசாலைகளில் பலவும் இப்பொழுது நூற்றாண்டு கண்டு வரும் காலம் இது.

எனவே கடின உழைப்பாலும் ஒன்றுபட்ட முயற்சியாலும் உருவாக்கப்பட்ட அந்தக் கல்விக் கூடங்களின் பாரம்பரியம் அழிந்து விடாமல் பாதுகாப்பது இன்றைய சந்ததியினரின் பொறுப்பும், தட்டிக் கழிக்க முடியாத கடமையுமாகும்.

கல்விக்கலாசாரத்தைப்பேணுவதற்கும், பாடசாலைகளைப் பராமரிப்பதற்கும் கல்வி நிலையை வளர்ப்பதற்கும் தேவையான மூல வளங்களை நாமே தேடிக் கொண்டு (அது கஷ்டமான பணிதான்) சம்பந்தப்பட்ட தரப்பினர் தமக்கிடையே 'பிய்ச்சல்,பிடுங்கல்' இல்லாமல் எதிர்காலப் பிரஜைகளின் நலன் ஒன்றையே முன்வைத்து உழைத்தால் நமது கல்விக்கலாசாரத்தைப் பேணுவது யாழ்ப்பாணத்தவர்களால் இயலாத ஒன்றல்ல.

## சிறப்புமிகு வரலட்சுமிவிரதம்

மனிதர்களின் உள்ளத்தையும், உடலையும் தூய்மையாக வைத்திருக்க பெரிதும் உதவுவது விரதம். எனவேதான் எம் முன்னோர்கள் வாரமொரு விரதம் வகையாகக் கொள்ள வேண்டும் எனச் சொன்னார்கள்.

இதனால் ஒவ்வொரு வாரமும் வரும் வெள்ளிக் கிழமையை பொதுவாக விரத நாளாகக் கைக்கொண்டு சைவசமய மக்கள் விரதமிருக்கின்றனர்.

வெள்ளிக்கிழமை இலட்சுமி பிறந்த நாளாக நம்பப் படுகிறது இலட்சுமியின் அருட் கடாட்சத்தினால் மனிதர்கள் அறிவு. ஆரோக்கியம், ஆயுள், சந்தானம், தனம் தானியம், விஜயம், வீரம் என்பவற்றைப் பெற்றுக் கொள்கிறார்கள். எனவே அவ்வாறான சகல சௌபாக்கியங்களையும் தரும் இலட்சுமி தேவிக்கு நன்றிக் கடன் செலுத்துவதுடன், மேற் கூறிய செல்வங்களை மேன்மேலும் வளர்த்துக் கொள்வதற்காகவும் வெள்ளிக்கிழமை புனித விரத நாளாக சைவசமய மக்கள்

**ஞானக்கதிர்**

மத்தியில் பரவி விட்டது.

வருடத்தில் வரும் எல்லா வெள்ளிக் கிழமைகளுக்கும் சிகரமாக விளங்குவது இலட்சுமிக்கு எனச் சிறப்பாக ஒதுக்கப்பட்ட வரலட்சுமி விரதம் வரும் வெள்ளிக்கிழமையாகும்.

இவ் விரதத்தின் தோற்றம் பற்றிய வரலாறு ''பவிஷ்யோத்தர'' புராணத்தில் உள்ளது. இப் புராணத்தின் படி பதிபக்தியும், தெய்வ பக்தியும் கொண்ட சாருமதி என்னும் பெண்ணின் கனவில் லட்சுமி தேவியே தோன்றி ஆவணிமாத பௌர்ணமிக்கு முன்வரும் வெள்ளிக்கிழமையில் தனக்குரிய விரதத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்றும், அன்றைய தினம் விரும்பும் வரங்களை அளிக்கும் வரலட்சுமியாகத் தான்காட்சியளிப்பார் எனவும் கூறி மறைந்தார்.

இவ்விரதத்தின் சிறப்பு யாதெனின் ஏனைய விரதங்கள் போல் கடும் உபவாசமோ, கடும் விரதமோ இருக்கத் தேவையில்லை. ஏனைய விரத நூல் கட்டும் போது பெண்கள் இடது கையிலும் ஆண்கள் வலது கையிலும் கட்ட வேண்டும் என்பதே விதி. ஆனால் இவ் விரதத்திற்கு மட்டும் யாவருமே வலது கையில்தான் நூல் கட்ட வேண்டும் என்பது விதியாகும். அத்துடன் இவ் விரதத்திற்காக வைக்கப்படும் கும்பத்தை நீரினால் நிரப்பாது, பச்சை அரிசியால் நிரப்புவதே சிறப்பு.

இவ் விரதத்திற்குரிய பிரசாதமாக ஒன்பது முடிச்சுகள் கொண்ட நூல் கட்டப்படுகிறது. எட்டு முடிச்சுகள் அஷ்டலட்சுமிக்காகவும், ஒன்பதாவது முடிச்சு வரலட்சுமிக்காகவும் போடப்படுகிறது. வரலட்சுமிக்கு விருப்பமான பூஜாபாத்திரமாக அறுகு கூறப்பட்டுள்ளது. இலட்சுமி தேவியின் பலவித நாமங்களால் கும்பத்திலும், நூலினும் அருச்சனை செய்து அந் நூலைக் கட்டிய பின்பு உணவருந்தலாம்.

விவாகமாகாத கன்னிப் பெண்கள் சிறந்த கணவனை அடையவும், விவாகமான பெண்கள் தீர்க்க சுமங்கலியாக இருக்கவும் இவ்விரதம் சிறந்த பலனைக் கொடுக்கிறது. அத்துடன் அனைவரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற இவ் விரதம்முதன்மை பெறுகிறது. இவ் வருடத்திற்குரிய வரலட்சுமி விரதநாள் இன்றாகும்.

-பாலவசந்தன்

## நல்வாழ்வு தர வா!

அல்லல் களைந்தே எமையெல்லாம்
அரவணைத்துக் காக்கின்ற நல்லூரா!
நல்வாழ்வு மண்ணில் மலர்ந்திட
நலங்கள் கூட்டி ஓடிவா!

வள்ளி தெய்வயானையுடன் வருவாய்
வரமெல்லாம் அடியவர்க்குத் தருவாய்
புள்ளி மயில் மீதினிலே வருவாய்
பொழுதெலாம் எமக்குத் துணையிருப்பாய்.

— தமிழானந்த பாரதி

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## தீவகத்தின் கல்வி நிலை

**வாசகர் திருமுகம்**

தீவக மாணவரின் கல்வி நிலை தற்போது வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்திலேயே தங்கியுள்ளது. மாணவர்கள் பேருந்தை எதிர்பார்த்த வண்ணம் பாடசாலைகளில் காத்திருப்பது பழைய வன்னி மன்னை ஞாபகப்படுத்துகிறது. வெளியூர் ஆசிரியர்கள் பத்து மணிக்கே பாடசாலைக்கு வருகின்றனர். போக்குவரத்து நிலையே இதற்குரிய காரணமாகும். இவர்கள் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலேயே பாடசாலைக்கு வருகின்றனர். இவர்களின் போக்குவரத்து ஒழுங்குகள் பற்றி அதிகாரிகள் அக்கறை எடுத்தால் என்ன?

அனைத்து அரச அலுவலகங்களும் தீவகத்தில் இயங்கும் பொழுது, வேலணை, ஊர்காவற்றுறை கல்விக் கோட்டங்கள் மட்டும் இயங்காமல் இருப்பது ஏன்? ஆசிரியர்களுக்கு ஒரு நீதி. அதிகாரிகளுக்கு வேறு நீதியா?

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் நிலவும் நீண்டநாள் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய அதிகாரிகளால் முடியவில்லை.

நிலைமை இப்படியிருக்க பிரதேசத்திலிருந்து தீவகத்திற்கு வெளியே ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய முயல்வது விவேகமான செயலா?

நீண்ட காலம் சேவையாற்றியவர்களை மட்டும் இடமாற்றம் செய்து அவ்விடத்திற்கு வேறு பொருத்தமான ஆசிரியர்களை நியமிப்பதில் தவறில்லை. 1990இல் இடம் பெயரும்போது இருந்த அனைத்து ஆசிரியர்களையும் அவர்களின் முன்னைய பாடசாலைகளுக்கு மீண்டும் நியமனம் செய்வதன் மூலம் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவுப் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்க முடியும்.

இலவச பாடநூல்கள் வந்து சேர்ந்தும் தீவகப் பாடசாலைகளுக்கு இதுவரையும் விநியோகம் செய்யப்படவில்லை. இரண்டாம் தவணைப் பரீட்சையும் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது ஆசிரியர்களை நியமிப்பதில் காட்டும் அவசரம் இவற்றில் ஏன் காட்டப்படுவதில்லை? அதிகாரிகளின் உறுதி மொழிகளை நம்பி வந்த நாம் பிள்ளைகளின் கல்வியை இழந்த நிலையில் உள்ளோம். எம்மிடம் இழப்பதற்கு வேறு எதுவுமே இல்லை.

தீவகத்தின் கல்விமான்களும் பொது நிறுவனங்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாக விழித்தெழ வேண்டும். இல்லையேல் உங்களுக்குப்பின் ஒரு கல்விப் பரம்பரை தீவகத்தில் உருவாக முடியாது என்பதனை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

து. சாந்தலிங்கம்

கரம்பன்,
ஊர்காவற்றுறை

வாசகர் கவனத்திற்கு,

வாசகர் திருமுகப் பகுதிக்கு மடல்களை அனுப்புவோர் தமது சொந்தப் பெயர், நிரந்தர விலாசம் என்பனவற்றைத் தவறாது குறிப்பிட வேண்டும்.

புனைபெயர்களில் பிரசுரமாக வேண்டும் என்று விரும்பினும் சொந்தப் பெயர் குறிப்பிட்டால் மட்டுமே பிரசுரத்துக்குப் பரிசீலனை செய்யப்படும். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நாவலர் கல்வி நிலையம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகில்)

## ஆண்டு 5 (புலமைப்பரிசில் பரீட்சை) - 1996 -

அடுத்த 11ஆவது மாதிரிப் பரீட்சை 25-08-96 (ஞாயிறு)

பரீட்சை 6 பிரிவுகளில் நடைபெறுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| பிரிவு i — | காலை | 9-15 — 11-15 |
| ,, ii — | ,, | 10-15 — 12-15 |
| ,, iii — | ,, | 11-15 — 1-15 |
| ,, iv — | மாலை | 2-00 — 4-00 |
| ,, v — | ,, | 3-00 — 5-00 |
| ,, vi — | ,, | 3-30 — 5-30 |

★ எமது வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் 25 – 08 – 1996 அன்று தொடர்புகொள்ளவும்.

(42375)


# நன்றிகள்



பிறப்பு: 29 04-1976

இறப்பு: 04-07-1996

## செல்வன் சுகந்தன் நவரட்ணசிங்கம்

(மாணவன் பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்)

அன்பு மகன் சுகந்தனின் மரணச் செய்தி அறிந்து எம் துயரில் கலந்து ஆறுதல் கூறி, மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் 31 ஆம் நாள் இரங்கந் பலியில் கலந்து இல்லம் வந்து இரங்கலுரை வழங்கி ஆறுதல் கூறிய அனைத்து இதயங்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பிக் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டு எம் துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எம் இதய நன்றிகள்.

சுகந்தனின் ஆன்ம சாந்திக்காக என்றும் உங்கள் செபத்தை வேண்டி நிற்கிறோம்.

பெற்றோர்
G. E. நவரட்ணசிங்கம்,
(தபால் அதிபர்)
திருமதி குணசிலி நவரட்ணசிங்கம்
சகோதரிகள்
சுகிர்தா, சுகன்யா.

நிரந்தர முகவரி,
பேசயிட்டி,
இளவாலை,

தற்போதைய முகவரி:
951/10 வளன்புரம்.
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(42363)

# மரண அறிவித்தல்

## இராசா விஜயரத்தினம்

(B. A. Dip — in Ed.)

(முன்னாள் அதிபர், தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி, திட்டமிடல் பகுதி, கோட்டக் கல்வி அலுவலகம், பருத்தித்துறை)

அல்வாய் தெற்கு "ராஜ் பவன்" ஐச் சேர்ந்த இ. விஜயரத்தினம் 21 - 8 - 96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற க. இராசா — தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், அன்னராணியின் அன்புக் கணவரும், பிரியதர்சினி, விஜயதர்சினி, ஜீவதர்சினி, மதனராஜன், மாதங்கினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. இ. இராசரத்தினம், (கட், நெல்.ப நோ.கூ. சங்கம்), திரு. இ. ஜெயரத்தினம் (மக்கள் வங்கி, நெல்லியடி), திரு. இ. அரியரத்தினம் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), திருமதி ச. வள்ளிநாயகி, திருமதி ஜெ. இரத்தினகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. செ. சதானந்தன் (அதிபர், ஸ்ரீ நாரத வித்தியாலயம், கரவெட்டி), திரு. செ. ஜெயவீரசிங்கம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், திரு, திருமதி மா. வேலாயுதம் தம்பதியரின் மூத்த மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22 - 8 - 96 வியாழக்கிழமை பி. ப. 2.00 மணியளவில் நடைபெற்றன.

தகவல்:
இ. இராசரத்தினம்

நட்சத்திர பவனம்,
அல்வாய்.

(42372)

# அ.தி.மு.கவின் கொடி, சின்னத்துக்கு அதிருப்தியாளர் குழு உரிமை கோரும்

சென்னை, ஒக. 23

அ தி. மு கவின் கொடி, சின்னம் ஆகியவற்றுக்கு தேர்தல் ஆணையத்திடம் உரிமை கோரப் போவதாக முன்னாள் அமைச்சர் முத்துச்சாமி தலைமையிலான அ. தி. மு. க அதிருப்தியாளர் குழு தெரிவித்துள்ளது.

அ. தி, மு. க. வில் இருந்து நீக்கப்பட்ட எஸ். முத்துச்சாமி, கண்ணப்பன், அரங்கநாயகம் ஆகியோர் நேற்று முன்தினம் சென்னையில்நடத்திய பொதுக் கூட்டத்தின் பின்னர் திரு. முத்துச்சாமி செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் ஜெயலலிதாவை நீக்கும் தீர்மானம் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

சென்னை அதிராமபுரத்தில் உள்ள இந்தியன் வங்கிக் கிளையில் உள்ள அ.தி.மு.க வங்கிக் கணக்கை தங்களைத் தவிர வேறு எவரும் உபயோகப்படுத்த அனுமதிக்கவேண்டாம் என்று கோரி அ.தி.மு.க. அதிருப்தியாளர் குழுவின் பொதுச் செயலாளர் எஸ். முத்துச்சாமி வங்கி மேலாளருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கட்சியின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கை பயன்படுத்த தம்மை அல்லது தமது குழுவின் பொருளாளர் கே. பொன்னுச்சாமியை மட்டுமே அனுமதிக்கவேண்டும் என்றும் கடிதத்தில் முத்துச்சாமி கேட்டுள்ளார். (உ–3)

பழைய ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்றம் உத்தரவிட்டது.

அதனால் அவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அந்நிய செலாவணி மோசடி சம்பந்தமான முதலாவது வழக்கில் சசிகலா பிணையில் செல்வதற்கு 3 கோடி ரூபா ரொக்கத் தொகையும், அதே தொகைக்கு மேலும் இருநபர்களின் உறுதிப்பத்திரமும் சமர்ப்பிக்கும்படி சென்னைக் கீழ் நீதிமன்றம் ஒன்று விடுத்த உத்தரவைத் தளர்த்தி பத்து லட்சம் ரூபா ரொக்கம் மற்றும் அதே தொகைக்கு இருவரின் உறுதிப்பத்திரமும் சமர்ப்பித்து பிணையில் செல்ல அனுமதிக்கும் விதத்தில் சென்னை உயர் நீதிமன்றம் புதிய உத்தரவு ஒன்றை நேற்று விடுத்தது.

அதேசமயம் —

செயலாக்கப் பிரிவினர் நான்கு தடவைகள் அனுப்பிய நோட்டீஸை ஏற்க மறுத்து அப்பிரிவினர் முன்னிலையில் ஆஜராக சசிகலா தவறியது தொடர்பான வழக்கில் 10 ஆயிரம் ரூபா சொந்த உறுதிப் பத்திரமும், இதே தொகைக்கு மேலும் இரு நபர்களின் உறுதிப்பத்திரமும் சமர்ப்பித்து பிணையில் செல்வதற்கு சசிகலாவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

சசிகலா தமக்கு எதிரான இரு வழக்குகளிலும் பிணையில் செல்வதற்கான அனுமதியை சென்னை உயர் நீதிமன்றத்திடம் பெற்றுக்கொண்ட அதேசமயம் மூன்றாவது வழக்கில் அவர் கைது செய்யப்பட்டார்.

சுமார் மூன்றரை லட்சம் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணியை மோசடி செய்த வழக்கு ஒன்றுதொடர்பாகவே அவரைக் கைது செய்து 5 ஆம் திகதி வரை காவலில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் முத்துச்சாமி உத்தரவிட்டார்.

இந்த வழக்குத் தொடர்பாக சசிகலாவுக்கு பிணை அனுமதி கோரும் மனு உடனடியாகவே நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு இன்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது (உ–3)

ஆசிரியர் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுநிதியைப் பெற்றுச் சம்பளத்தை வழங்க வேண்டும் என்றும் —

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

கட்டுநிதி ஆவணத்தை திருகோணமலையிலிருந்து கல்விப் பகுதி அதிகாரிகள் மூலம் கொடுத்தனுப்பும் நடைமுறை இனிமேல் கைக்கொள்ளப்பட மாட்டாது எனவும் தெரியவருகிறது. (அ–5)

# தொண்டர் நிறுவனங்கள் இயங்குவதற்கு அனுமதி

## இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில்

கொழும்பு, ஒக. 23

வடபகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் இயங்குவதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

வடக்கின் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இயங்கிய பல வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் தமது பணிகளை நிறுத்தி இருந்தன.

இந்தத் தொண்டர் நிறுவனங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கலாம் என்று —

வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் சோமபால குணதீரா அறிவித்திருப்பதாக —

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவன அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டார்.

எனினும் இராணுவக் கட்டுப்பாடடில் உள்ள யாழ்ப்பாணத்தில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மட்டுமே இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. (அ–3)

சேடப்பட்டி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக காவல்துறை உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று பரமசிவத்தின் வீட்டில் இருந்தும் பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக அவர் சொன்னார்.

இதற்கிடையில் —

தாம் கைது செய்யப்பட்டாலும் தாம் பிணையில் செல்லக் கூடியதாக தமக்கு முன்பிணை அனுமதி வழங்கும்படி கோரி சேடப்பட்டி முத்தையா சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இதற்கிடையில் —

தமக்கு முன்பிணை அனுமதி வழங்கக் கோரி ஜெயலலிதா அரசில் அமைச்சர்களாகப் பணிபுரிந்த கே. ஏ. செங்கோட்டையன், எஸ் ரகுபதி ஆகியோர் சமர்ப்பித்த மனுக்களை சென்னை உயர்நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

ஜெயலலிதா அரசின் அமைச்சர்களாகப் பணிபுரிந்த எஸ். டி. சோமசுந்தரம், செல்வகணபதி, இந்திராகுமாரி ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருப்பது தெரிந்ததே. (உ–3)

ரணில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிக் கவனிக்கும்படி தமது செயலாளரைப் பணித்திருந்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழு ஒருபோதும் இவ்வாறான நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரியவந்துள்ளது.

இந்த விவரங்களை எதிர்க்கட்சித் தலைவருக்கு தாம் நேரில் அறிவித்திருப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

நாட்டில் தோன்றியுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஐ. தே. கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்பட அரசு முயல்கிறது எனவும் —

இது ஒரு கட்டாய தேவை எனவும் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டுமாயின் ஐ. தே. கட்சியினர் மனம் நோகும் விதத்தில் செயற்படக் கூடாது என்ற நோக்கில் அரசு செயற்படுகிறது போல் தெரிகிறது என அரசியல் அவதானிகள் குறிப்பிட்டனர். (உ–3–10)

அரசமைப்புத்..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்று நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளும் சகல குழுக்களும் கட்சிகளும் கருதுகின்றன என்றும் அவர் மேலும் கூறினார். (உ–3)


# HUDEC

## தையற் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

மனித முன்னேற்ற நடு நிலையத்தால் நடத்தப்படும் தையற் பயிற்சி வகுப்புக்கள், மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள எமது வளாகத்தில் மீண்டும் ஆரம்பமாக உள்ளன. ஏற்கனவே நாங்கள் பங்குத் தந்தையர்களூடாக அறிவித்தபடி க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் சித்தியடைந்த பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வகுப்புக்கள் ஆரம்பமாகும் திகதி:
02.09.1996
நேரம்: காலை 9–12 மணிவரை

(42368) —நிலைய இயக்குநர்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 23-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org